

விஜயாவின்

மிஸ்ஸியம்மா

டைரக்ஷன்...ப்ரசாத்...தயாரிப்பு...நாகிரெட்டி & சக்ரபாணி

நடிகர்கள் :

கணேஷ்	....	பாலு
சாரங்கபாணி	....	லோகிதாசன்
தங்கவேலு	....	ராஜு
நம்பியார்	....	டேவிட்
ரங்காராவ்	....	ஜமீன்தார்
ஏழுமலை	.	வாத்தியார்
கருணாநிதி	...	பாண்டியன்
துரைசாமி	....	மேரியின் தந்தை
சந்தானம்	....	முதலாளி
சாவித்திரி	....	மேரி
ஜமுனா	....	சீதா
ருஷ்யேந்திரமணி	....	காமாட்சி
மீனாக்ஷி	....	மேரியின் தாய்

மற்றும் பலர்

பின்னிசை : **பி. லீலா, ஏ. எம். ராஜா, சுசீலா.**

இப்புத்தகத்திலுள்ள பாடல்களும், கதையும் உரிமைபெற்றவை இதன் பகுதிகளையோ, முழுவதையுமோ அச்சிட்டு வெளியிடுவோர் தண்டனைக்காளாவார்கள்.

விலை **1** *அணா*

மிஸ்ஸியம்மா

கதைச் சுருக்கம்

மகாலக்ஷ்மி ஆரம்பப்பள்ளியை ஆண்டிப்பேட்டை ஜமீன்தார் கோபாலப் பிள்ளை நடத்தி வருகிறார். ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்களாக இருந்துவந்த அவரது மைத்துனன் ராஜுவும், ஒரு நாட்டு வைத்தியரும் பள்ளிக்கூடத்தைச் சரியாக கவனியாது அலட்சியம் செய்கின்றனர்.

ஜமீன்தார் பள்ளியின் அலங்கோல நிலையைக்கண்டு உடனே புது உபாத்தியாயர்களை நியமிக்கத் தீர்மானித்துக்கொள்ளுகிறார். ராஜுவின் யோசனையின் படியும், தனது மகள் சீதாவின் விருப்பத்திற்கும் இணங்க தம்பதிகளாக உள்ள பி. ஏ. பட்டதாரிகள் உபாத்தியாயர் வேலைக்குத் தேவையென பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துகிறார். அவர்களுக்கு சங்கீதம் தெரிந்திருக்கவேண்டுமென்பதும் ஒரு நிபந்தனை.

துப்பறியும் ராஜுவிற்கு ஒரு அபூர்வ யோசனை தோன்றுகிறது பதினாறு வருஷங்களுக்குமுன் கும்பகோணத்தில் காணாமற்போன ஜமீன்தாரின் மூத்த மகள் மகாலக்ஷ்மியைப்பற்றி தகவல் கொடுப்போருக்கு மூவாயிரம் ரூபாய் சன்மானமளிக்கப்படுமென விளம்பரம் செய்கிறான். அத்துடன் அப்பெண்ணின் அடையாளமாக வலது கால் மச்சத்தையும், கழுத்தில் அணிந்திருந்த புலிநக மாலையையும் குறிப்பிடுகிறான்.

இளைஞன் பாலு ஒரு பி. ஏ. பட்டதாரி. சென்னையில் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் வீட்டுப் பையனுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்து அந்த பணத்தால் வாழ்க்கையை நடத்திவந்தான். அதே உத்தியோகஸ்தரின் பெண்ணுக்கு மேரி என்னும் யுவதி சங்கீதமும் பாடமும் கற்றுக்கொடுத்து வந்தாள். திடீரென சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு ஊர் மாற்ற உத்திரவு வந்துவிட பாலுவுக்கும் மேரிக்கும் கிடைத்துவந்த வருமானம் நின்றுபோகிறது.

மேரி சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது தகப்பனார் டேவிட் என்னும் வாலிபனிடம் நானூறு ரூபாய் கடன் பட்டிருந்தார். அவன் தினமும் மேரியின் வீட்டிற்கு வந்து கடனைத் திருப்பித் தரும்படியோ அல்லது மேரியைத் தனக்கு கல்யாணம் செய்துகொடுக்கும்படியோ கேட்கிறான். மேரிக்கோ அவனை சற்றும் பிடிக்காது. ஆனால் டேவிட்டோ எப்படியாவது மேரியை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று துடியாய் துடிக்கிறான்.

உத்தியோகத்திற்காக அலையும் பாலுவுக்கு லோகிதாசன் என்ற பிச்சைக்காரன் அகப்படுகிறான். அவனோ கைகாரப் பேர்வழி. சமயத்திற்குத் தகுந்த வேஷம் போடுபவன் ஒருநாள் பாலு பத்திரிகையை வைத்துப் படித்துக்கொண்டிருக்கையில் ஆண்டிப்பேட்டை பள்ளியின் விளம்பரத்தைப் பார்க்கிறான். அந்த சமயம் மேரி அங்கு வரவே அவள் கஷ்ட நிலையையும் டேவிட் அவளைத் துன்புறுத்தியதையும் கண்ட பாலு பத்திரிகையில் வந்த விளம்பரத்தைக்காட்டி தானும் அவளும் கணவனும் மனைவியும் போல ஏன் ஒரு மனு போடக் கூடாதென யோசனை கேட்கிறான். இதனால் மேரி வெகுண்டு எழுந்து சென்று

விடுகிருள். அவள் பின்னுலே சென்று வீட்டு விலாசத்தை அறிந்து வரும்படி பாலு லோகிதாசனை அனுப்புகிருன்.

இரவெல்லாம் மேரி யோசனை செய்து மறுநாள் காலை பாலு இருக்கும் பார்க்கிற்கு வந்து அவனது யோசனைக்கு இணங்குவதாகக் கூறுகிருள். ஆனல் இரண்டு மாதம் இருந்து டேவிட் கடனைத் தீர்ப்ப தற்காகத்தான் அவ்விதம் செய்வதாக பாலுவிடம் முன்கூட்டியே சொல்லிவிடுகிருள். இருவரும் மனு அனுப்புகிருர்கள்.

இரண்டொரு நாட்களில் ஆண்டிப்பேட்டை ஜமீன்தாரிட மிருந்து அவர்களுக்கு நியமன உத்திரவும் ரயில் செலவுக்காக பணமும் மணியார்டர் மூலம் கிடைக்கிறது. இருவரும் லோகிதாசனை அழைத்துக்கொண்டு ஆண்டிப்பேட்டையை அடைகின்றனர்.

ஆண்டிப்பேட்டை ஜமீன்தார் பாலு வந்ததுமே அவனைத் தனது மாப்பிள்ளை போலவும், மேரியைத் தனது பெண்போலவும் உறவு கொண்டாடத் தொடங்குகிருர். அவர்களிருவருக்கும் தனியாக ஒரு வீட்டை ஏற்பாடு செய்து அதில் சகல வசதிகளையும் செய்து கொடுக்கிருர்.

ஜமீன்தார் மைத்துனன் ராஜுவுக்கு மேரியைப் பார்த்ததும காணுமற்போன மகாலக்ஷ்மியோ என சந்தேகம் வருகிறது. அவள் காலில் ஏதாவது மச்சம் இருக்கிறதாவெனப் பார்க்க முயல்கிருன். ஆனுல்முடியவில்லை.

ஜமீன்தாரின் பெண் சீதா ஒரு வெகுளி. அவள் பாலுவிடம் பழகும் முறை மேரிக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அவளுக்கும் சீதா வுக்கும் சிறு சிறு சச்சரவுகள்கூட ஏற்படுகின்றன பாலு அவைகளை யெல்லாம் எப்படியோ சமாளித்துச் சரிப்படுத்திக்கொள்கிருன்.

ஒருநாள் ஜமீன்தார் பாலுவையும மேரியையும் சாப்பிடக் கூப்பிடுகிருர் மேரி போக மறுக்கவே பாலு மட்டும் ஜமீன்தார் வீட் டிற்குச்செல்கிருன். இதைக்கண்டு பாலுவிடம் ஏன் மனைவியை அழைத் துக்கொண்டு வரவில்லை என்று கேட்க, ஏதோ உடம்புக்குச் சரியில்லை யென்று ஜமீன்தாரிடம் சாக்குச் சொல்லுகிருன். இதைக் கேட்ட ஜமீன்தார் அவனை உடனே வீட்டிற்குப் போகச்சொல்லி தான் வைத் தியருடன் அங்கு வருவதாகக் கூறுகிருர்

பாலு உடனே வீட்டிற்குப்போய் மேரியிடம் நடந்ததைச் சொல்லி ஏதோ வியாதி வந்தவளைப்போல் நடிக்கக் கெஞ்சுகிருன், அவளும் வேண்டா வெறுப்பாக ஒப்புக்கொள்கிருள். ஜமீன்தார் தன் மனைவியுடனும் வைத்தியனுடனும் வந்து சேர்கிருர். வைத்தியன் நாடி பிடித்துப் பார்த்துவிட்டு ஏதேதோ வியாதிகளைக் கூறி முடிவில் மேரிக்குப் பேய் பிடித்திருக்கிறதெனக் கூறுகிருன். இதை ஜமீன் தாரும் அவரது மனைவியும் நம்புகின்றனர் மேரியோ கோபங்கொண்டு தான் கிறிஸ்தவப் பெண்ணென்றும் தன் பெயர் மேரி என்றும் கூறு கிருள். ஆனல் அதை ஜமீன்தார் நம்புகிறதில்லை. பாலுவும் அவ ளுக்குப் பேய் பிடித்திருக்கிறதெனக்கூறி அந்த சங்கட நிலையிலிருந்து மெதுவாகத் தன்னைத் தப்புவித்துக்கொள்கிருன்.

ஜமீன்தாரின் பெண் சீதா பாலுவிடம் பாட்டு சொல்லிக்கொள் வது ராஜுவுக்குப் பிடிக்கவில்லை அதேபோல பாலு சீதாவுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுப்பது மேரிக்குப் பிடிக்கவில்லை. ராஜு இது விஷயமாக மேரியை நாடுகிருன். மேரி சொன்ன யோசனையின்படி ராஜு தானே சங்கீதம் கற்றுக்கொண்டு சீதாவுக்கு கற்பிக்க விரும்பு கிருன். ஆனல் சங்கீதம் அவனுக்குச் சற்றும் வருவதில்லையே.

ஒரு நாள் பாலுவும் மேரியும் ஏதோ சச்சரவிட்டுக்கொண்டிருக்கின்றனர். சீதாவுடன் தாராளமாக பாலு பழகுவதைக் கண்டு மனம் பொருமிய மேரி தான் ஊருக்குப் போவதாகக் கூறுகிறாள் அப்போது ஜமீன்தார் அங்கு வந்து சேர்கிறார். ஏதோ பேச்சுவாக்கில் பாலு "இரண்டு மாசமாகவில்லை இப்போதே இவள் வீட்டுக்குப்போவதாகக் கூறுகிறாளே" என்று சொல்லுகிறான். இதற்குத் தகுந்தாற்போல மேரியும் தான் முதல் மாதமே போக விரும்பியதாகவும் பாலு தான் இரண்டு மாதம் முடிந்ததும் போகலாமென்று கூறியதாகவும் சொல்லவே ஜமீன்தாரும் அவர் மனைவியும் மேரி கர்ப்பிணி என தப்பாக நினைத்து சந்தோஷப்பட்டு அவளுக்கு உடனே சீமந்த முகூர்த்தம் நடத்துவது என தீர்மானிக்கின்றனர்.

மேரியை சீமந்தத்திற்கு வரும்படி அழைத்துவிட்டுப் போகிறாள் ஜமீன்தாரின் மனைவி. சீமந்தம் என்றால் என்ன என்பதறியாத மேரி தான் வருவதாக ஒப்புக்கொண்டுவிடுகிறாள்.

சீமந்தம் நடக்கிறது. ஜமீன்தார் முதலிலேயே பாலுவை மாடியில் படுக்கை அறையில் தள்ளி கதவை சாத்திவிடுகிறார். மேரி வரும் சத்தம் கேட்டு பாலு ஒரு திருடனைப்போல நடித்து வெளியேற முயல்கிறான். ஆனால் அவன் இன்னாரென்பது மேரிக்குத் தெரிந்துவிடுகிறது. எப்படியாவது அந்த இடத்தைவிட்டு அவன் போய்விடவேண்டுமென்று மேரி கூறவே பாலு அந்த மாடியிலிருந்து கீழே குதித்து வீட்டிற்கு ஓடுகிறான்.

ராஜூவிற்கு அவ்வப்போது உதவி செய்வது போல நடித்துப் பணத்தைக் கறந்துவரும் லோகிதாசன் பாலு அலங்கோல நிலையில் வருவதைக் கண்டு அவனை விசாரிக்க, அவன் ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறான். அப்போது மேரி வந்து கதவைத் தட்டவே சட்டென காலில் துணியை எடுத்துக் கட்டிக்கொண்டு பாலு கால் முறிந்தவனைப் போல நடிக்கிறான். தன்னால் பாலு எவ்வளவு கஷ்டப்படுகிறானென்பதை நினைத்து மேரி மனம் கலங்கிகிறாள்.

டேவிட்டுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியை அவள் தகப்பனார் மேரி அனுப்பிய நானூறு ரூபாயைக் கொடுத்துத் தீர்க்கவே டேவிட் மேரியின் இருப்பிடத்தைப் பற்றி விசாரிக்கிறான். மேரியின் தகப்பனார் சரியான பதில் சொல்லாது போக அன்றிரவே மேரி எழுதிய கடிதத்தையும் புலிநக மாலையையும திருடிக்கொண்டு அவன் ஆண்டிப் பேட்டைக்குச் செல்கிறான்.

பாலுவின்மீது பகைமை கொண்டிருந்த நாட்டு வைத்திய உபாத்தியாயரை டேவிட் சந்தித்து மேரியின் வீட்டை அடைகிறான். அங்கு வந்து டேவிட் தனது பணத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் இல்லையேல் தன்னை மணக்கவேண்டுமென்றும் கூறுகிறான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பாலு டேவிட்டை செம்மையாக உதைத்து விரட்டுகிறான். டேவிட் எல்லா விஷயத்தையும் ஜமீன்தாரிடம் கூறி அவர்களை உத்தியோகத்திலிருந்து தொலைத்துவிடுவதாகக் கருவிக்கொண்டு செல்கிறான்.

இதைக் கண்டு மேரியும் பாலுவும் என்ன செய்வதென்று திகைக்கின்றனர். ஜமீன்தார் டேவிட்டுடனும், நாட்டு வைத்தியரிடனும், தன் மைத்துனன் ராஜூவுடனும், தன் மனைவி மகளுடனும் அங்கு வந்து சேர்கிறார். நெருக்கடியான நிலை ஏற்பட்டுவிட்டது? மேரியும் பாலுவும் என்ன ஆனார்கள்? டேவிட் கதி என்ன? மேரியைத் தேடி வந்த அவளது தாய் தந்தையர் என்ன ஆனார்கள்? ராஜூவின் வேலைத்தனம் என்ன? என்பதை வெள்ளித் திரையில் காணுங்கள்.

மிஸ்ஸியம்மா

பாட்டு

மேரி :

ராகரஸாமிர்தபானமே தினமே
ரஞ்சிதமே - ஓ, மனமே (ரா)

அனுபல்லவி

யாகயோக தியாகபோக பாக்யம் தருமே (ரா)

பல்லவி

சதாசிவமயமெனும் நாத ஓங்காரஸ்வர
தியானமே ஜீவன்முக்தி
சுகம்காணுமே - மனமே (ரா)

லோகிதாசன் :

தர்மம் தலைகாக்கும் - சாமீ
தர்மம் தலைகாக்கும்
தர்மம் செய்தால் புண்ணியமுண்டு
கர்மம் தொலையுமே - சாமீ (தர்மம்)

கோடிவித்தைகளும் வயித்துக்காகவே
குன்னுதே உடல்பிச்சை கேட்கவே
பார்வை இல்லாமே பார்க்கப்பிடிக்கலே
பாடுபடவும் இனி வழியும் தெரியலே (தர்மம்)

ஐஸ்க்ரீம் தின்றால் பசியடங்காது
காசிருந்தாலும் வயிறுநிறையாது

செய்யுந்தானமே சிறியதானுலும்
தீராதவினையும் தீருமேசாமி (தர்மம்)

ஐயா கொடுக்கவும் அடியேன் வாங்கவும்
எல்லாம் பூர்வீகபந்தமே - சாமீ
பிச்சை ஓட்டையே நீ மறந்தாலும்
பிரம்மாவும் ஏட்டிலே வரவு வெச்சிட்டான் (தர்மம்)
ஐயா - சாமீ - அப்பனே.

பாலு :

முடியுமென்ருல் படியாது
படியுமென்ருல் முடியாது
வஞ்சியரின் வார்த்தையிலே
அர்த்தமே வேறுதான்
அர்த்தமெல்லாம் வேறுதான்
அகராதியும் வேறுதான் (முடியு)

அலுக்கி குலுக்கி ஒதுங்கி நின்ருல்
அருகில் ஓடிவாருமென்றே
வலியப் பேசி வாருமென்ருல்
வந்தவழியைப் பாருமென்றே (வஞ்சி)

விறைப்பும் முறைப்பும் இருப்பதெல்லாம்
விஷயமதிலே விருப்பமென்றே
சிரித்துச் சிரித்துப் பேசினுலும்
சரசமினியும் போதுமென்றே (வஞ்சி)

லோகிதாசன் கோஷ்டியார் :

சீதாராம் சீதாராம்
சீதாராம் - ஜெய் - சீதாராம்
உள்ளே விகாரம் வெளியில் அபாரம்
உலகமெல்லாம் வீண் டம்பாசாரம்

தன்னலமில்லாத தலைவரென்பாராம்
தலையிலே மிளகாய் அறைத்திடுவாராம்

உண்டியும் நிதியும் சேர்த்திடுவாராம்
கிண்டிரேஸிலே விட்டிடுவாராம்

பாண்டித்யம் பெற்ற சிங்கமென்பாராம்
பழைய ஒண்ணுங்கிளாஸ் படிச்சிருப்பாராம்

கரரியம் சாதிக்க காக்கா பிடிப்பாராம்
காரியம் முடிஞ்சா டேக்கா கொடுப்பாராம்

டிப்புடாப்பு டகல்டுப்பு டமாரம்
கலிகாலம் நம்மகிரகசாரம்

சீதா :

அறியாப் பருவமடா—மலர்
அம்பையே வீசாதேடா—மதனு (அறியா)

மாலையின் தென்றலில்
மருவிடும் மலர்போல்
மனமே மகிழ்ந்ததடா—வாழ்வில்
புதுநிலை காணுதடா—மதனு (அறியா)

கொஞ்சிடும் கிளிபோல்
குலவிடவே மனம்
மிஞ்சியே தாவுதடா—அதனுல்
மேனியும் சிலிர்க்குதடா—மதனு (அறியா)

இதயக் காவினிலே
இசைக் குயில்தானே
இனிமையாய்க் கூவுதடா—ஏதோ
இன்பமே காணுதடா—மதனு (அறியா)

மேரி :

தெரிந்துகொள்ளணும் பெண்ணே—
அதைப்போல்
நடந்துகொள்ளணும் பெண்ணே— (தெரிந்து)

நிலைமாறிடும் ஆடவருடன்
நெருங்காமலே பழகவே—நீ (தெரிந்து)

தனக்கு உதவிவேண்டினாலும்
தானாகவே போகாதே
இனிக்கப்பேசி அவதூறாய்
ஏளனமே செய்வாரென்று (தெரிந்து)

பல வார்த்தைக்கும் ஒரு வார்த்தை
பதிலே சொல்லக்கூடாது
பல பொருள்பட இல்லாததை
பறைசாற்றவே துணிவாரென்று (தெரிந்து)

பாலு :

பழகத் தெரியவேணும்—உலகில்
பார்த்து நடக்கவேணும்—பெண்ணே (பழக)

பழங்காலத்தின் நிலைமறந்து
வருங்காலத்தை நீ உணர்ந்து (பழக)

பிடிவாதமும் எதிர்வாதமும்
பெண்களுக்கே கூடாது
பேதமில்லா இதயத்தோடு
பெருமையோடு பொறுமையாகப் (பழக)

கடுகடுவென முகம்மாறுதல்
கர்னாடக வழக்கமன்றோ
கன்னியர்கள் ஆடவரை
புன்னகையால் வென்றிடவே (பழக)

மேரி :

எனையாளும் மேரி மாதா
துணை நீயே மேரி மாதா—என்றும் (எனை)

பரிசுத்த ஆவியாலே
வரபுத்ரன் ஈன்ற தாயே

பிரபு ஏசுநாதன் அருளால்
புவியோரும் புனிதமடைந்தார் (என்னை)

நெறிமாறி வந்ததாலே
நகைப்பானதே என் வாழ்வே
கணமேனும் சாந்தி இலேயே
அனுதினமும் சோதியாதே (என்னை)

பாலு :

இணையேது மில்லாத விசால
சிருஷ்டியிலே

விசித்திரங்களெல்லாம் எனதாகுமே

எல்லாம் உனக்கே தருவேனே
இனிமேல் உரிமை நீதானே

தளுக்கு தளுக்கெனவே தாரகை மின்னிடும்
நீலவானகமும் எனதாகுமே
எண்ணிலாமாந்தர்க்கு இதயவேகந்தரும்—குளிர்ந்த
வெண்ணிலாவும் எனதாகுமே (எல்லா)

மனோகரமாக குதூகலந் தரும்
வசந்த ருதுவும் எனதாகுமே
மலரோடு சேர்ந்து விளையாடியே வரும்
மலய மாருதமும் எனதாகுமே (எல்லாம்)

பாலு & சீதா :

பிருந்தாவனமும் நந்தகுமாரனும்
யாவருக்கும் பொது செல்வமன்றோ
ஏனோ ராதா இந்தப் பொறுமை
யார்தான் அழகால் மயங்காதவரோ (பிருந்)

புல்லாங் குழலிசை இனிமையினாலே
உள்ளமே ஜில்லெனத் துள்ளாதா

ராகத்திலே அனுராக மேவிஞல்
ஜகமே ஊஞ்சலில் ஆடாதா (பிருந்)

கண்ணனின் உன்னத லீலையை நினைத்தால்
தன்னையே மறந்திடச் செய்யாதா
ஏஞே ராதா இந்தப் பொருமை
யார்தான் அழகால் மயங்காதவரோ (பிருந்)

பாலு : வாராயோ வெண்ணிலாவே
கேளாயோ எங்கள் கதையே
அகம்பாவம் கொண்ட சதியாள்
அறிவால் உயர்ந்திடும் பதிநான்
சதிபதி விரோதம் மிகவே
சிதைந்தது இதந்தரும் வாழ்வே.

மேரி : வாராயோ வெண்ணிலாவே
கேளாயோ எங்கள் கதையே
வாக்குரிமை தந்த பதியால்
வாழ்ந்திடவே வந்தசதி நான்
நம்பிடச் செய்வார் நேசம்
நடிப்பதெலாம் வெளிவேஷம்

பாலு : வாராயோ வெண்ணிலாவே
கேளாயோ எங்கள் கதையே
தன் பிடிவாதம் விடாது
என் மனம்போல் நடக்காது
நமக்கென எதுவும் சொல்லாது
நம்மையும் பேசவிடாது

மேரி : வாராயோ வெண்ணிலாவே
கேளாயோ எங்கள் கதையே
அனுதினம் செய்வார் மோடி
அகமகிழ்வார் போராடி
இல்லறம் இப்படி நடந்தால்
நல்லறமாமோ நிலவே.

கோஷ்டி :

ஸ்ரீ ஜானகி தேவி சீமந்தம் வாரீர்
மகாலக்ஷ்மி சுந்தரவதனமே பாரீர் (ஸ்ரீ)

பன்னீரும் கந்தமும் பரிமள மணம்வீசி
பாமாலை புகழ்சூட வாரீரோ அம்மா
பொன்னால் மின்னிடும்மேனி புனித கலாவாணி
பூமாலை சூடவே வாரீரோ—அம்மா (ஸ்ரீ)

புன்னகை எழில்மேவும் பூரண சந்திரன்போல
புத்திரசெல்வமே பெறவேண்டுமம்மா
இந்நில மீதிலே இன்பமாய் வாழ்ந்திட
எல்லோரும் நல்ஆசி தரவேண்டுமம்மா (ஸ்ரீ)

மேரி :

மாயமே நானறியேன்......ஓ
தண்மதி ராஜா வெண்ணிலா ராஜா
—மாயமே—நானறியேன்

அழகு நிலாவே உனது மகிமையை
அறிந்திருந்தாலும் அனுபவியேனே
மறைந்தே தூவிடும் கலையின் ஜோதியே
மறைமுகமாகவே நானறிவேனே

கணணில் கலிக்கமிடும் கதிரலையாலே
கரைந்திட உள்ளமே கனிந்தேனே
அன்பையேகோரி அருகினில் யாரோ
அழைப்பதுபோலே நானுணர்ந்தேனே !

கதை	...	*சக்ரபாணி*
வசனம், பாடல்கள்	...	*தஞ்சை ராமய்யாதாஸ்*
ஒளிப்பதிவு	...	*மார்க்கஸ் பார்ட்லே*
ஒலிப்பதிவு இன்ஜினியர்	...	*ஏ. கிருஷ்ணன், பி.ஏ.*
பிரோசஸிங்	...	*சென் குப்தா பி.எஸ்.ஸி.*
உதவி ஒலிப்பதிவு இன்ஜினியர்	...	*வி. சிவராம், பி.ஏ., பி.எஸ்.ஸி.*
இசை அமைப்பு	...	*ராஜேஸ்வர ராவ்*
ஆர்க்கெஸ்ட்ரா	...	*ஏ. கிருஷ்ணமூர்த்தி*
கலை அரங்க நிர்மாணம்	...	*கோகலே, கலாதர்*
நடனம்	...	*பி. கிருஷ்ணமூர்த்தி*
எடிடிங்	...	*ஜம்புலிங்கம்*
மேக்கப்	...	*பீதாம்பரம்*
புரொடக்ஷன் நிர்வாகம்	...	*சலபதிராவ், ஜகந்நாத்*

டைரக்ஷன்: **பிரசாத்**

தயாரிப்பு:

நாகிரெட்டி & சக்ரபாணி

'மிஸ்ஸியம்மா' பாடல்களை

எச். எம். வி., கொலம்பியா இசைத்தட்டுகளில் கேளுங்கள்.

The B. N. K. Press Ltd., Madras-26

வருகிறது

விஜயாவின்

மகத்தான புராணப்படம்

சசிரேகா

பரிணயம்

(மாயா பஜார்)

டைரக்ஷன்... K.V. ரெட்டி, B.Sc (HONS)

தயாரிப்பு... நாகிரெட்டி & சக்ரபாணி